# சுடர்

மாத இதழ்

1 ஜூலை 83 | 50 காசு | 29




FREE E-BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

**நண்பரே! வணக்கம்**

★ தங்கள் புதிய அறிமுகம்
★ 'சுட்டி'க்குக் கிடைத்துள்ளது
★ தங்கள் நண்பர் ஒருவராக—
★ இலவசமாக மாதிரி இதழ்
★ ஒன்று அனுப்பியுள்ளோம்—
★ படியுங்கள்!

O தொடர்ந்து மாதா மாதம்
O 'சுட்டி'யைப் படிக்க
O விரும்புகிறீர்களா?
O 12 இதழ்களுக்கு ரூ. 5/- தான்!
O இதனை, பணவிடை (M.O.) வழி

"சுட்டி", 1494, அண்ணாநகர்,
சென்னை-600 040.

என்று முகவரிக்கு அனுப்பினால் தங்கள் வீடுதேடி மாதந்தோறும் சுட்டி வந்து சேருமே!

# "ஆபாச எழுத்தாளர்களை கைது செய்க!"

<u>நம் நாட்டில் வளர்ந்து வரும் வன்முறை கலவரங்கள் கற்பழிப்பு, பெண்கள் மீது தாக்குதல் ஆகியவற்றுக்கும் பத்திரிகைகளும் சினிமாவும் பரப்பி வரும் ஆபாசத்திற்கும் மிக நுட்பமான தொடர்பு இருக்கிறது.</u>

திருப்பத்தூர் (வ.ஆ) நுகர்வோர் சங்கம், மசாலா பத்திரிகைகள் துர்நாற்றம் பரப்பி வரும் ஆபாச இலக்கியங்களைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அதில் காம உணர்வுக்கும் வன்முறைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது! எப்படி?

"அமெரிக்காவில் வன்முறை அதிகரித்து வருவதற்கு ஆபாச இலக்கியம் முக்கிய காரணம் என்று அமெரிக்க அரசே ஏற்றுக் கொண்டு உள்ளது. அலெக்ஸ் கம்பிட், உட்வோர்டு போன்ற உலக அறிஞர்கள் ஆபாசம் வன்முறையைத் தூண்டுகிறது என்று நிரூபித்துள்ளார்கள்.

இன்னுமொரு தெளிவான நடைமுறை உதாரணம், நாம் ஒருவனை உதைக்கும் போது அல்லது திட்டும் போதும் குழாயடிச் சண்டையில் பெண்களும் ஆபாச சொற்களை பயன்படுத்துவதை நாம் அறிவோம்.



எனவே இந்த ஆபாச எழுத்துக்களுக்கு காரணமானவர்களை வன்முறை தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்தாலும் சரிதான்."

இந்த நுகர்வோர் சங்கம் சொல்வது மிகவும் நியாயமானதே! ஆனால் அரசும் ஆபாச இதழ்களும் தோழமை உடன்கை கோர்த்துக் கொண்டிருப்பதல்லவா இங்கு எதார்த்தம்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

# சுட்டியார் பதில்

**ஜூன் சுட்டியில் துர்வாசருக்கு "இதயம் பேசுகிறது" எதிர்ப்புத் தெரிவித்தது போல இருந்தது. ஆனால் உங்கள் கருத்து என்ன?**

—ஆர். ரவி வி. வேலூர்

இந்த மோதல் பல உண்மைகளை மக்கள் மத்தியில் வெளிக் கொணர்ந்திருக்கிறது என்பதை விளக்கும் கருத்துப் படமே அது. இப்பத்திரிகைகளைப் பற்றி ஏற்கனவே சுட்டி எழுதிய கருத்துக்களில் மாற்றமில்லை.

**பசி வந்து விட்டது. பத்தும் போய் விடுமா?**

—மேரி காந்தி, வேதாரணியம்

ஆனால் பசிக்கு உணவு தர முடியாத இந்த அமைப்பைப் பற்றிய சிந்தனை போய் விடக் கூடாது.

**சுட்டி என்பதற்குத் தமிழ் மொழியில் பல அர்த்தங்கள் உள்ளனவே எதை எடுத்துக் கொள்வது?**

—மு. அப்பாவு, அணிச்சம்பாளையம்

சுட்டிக் காட்டுதல், சுட்டித்தனமாக இருத்தல் இவற்றை எடுத்துக் கொள்ளுங்களேன்.

**தைரியமாக இருக்க ஒரு வழி சொல்லுங்களேன்?**

—ஆர். புவனேந்திரன், திருவொற்றியூர்

நெஞ்சில் நேர்மையைச் சுமப்பவன், பையில் பணத்தை சுமப்பவர்களை விட தைரியமாக இருக்கிறான்.

**அரசியல் வாதிகள், சினிமா நடிகர்கள், பத்திரிகையாளர்கள் இவர்களில் அதிகம் சம்பாதிப்பவர் யார்?**


—எஸ். மோகன், மே. மாம்பலம்

இவர்கள் மூவரையும் விட, இந்த மூன்றையுமே செய்யும் ஒரே ஆள் அதிகம் சம்பாதிக்கிறான்.

**பயணக் கட்டுரைகள் எப்படி இருக்க வேண்டும்?**

—பி. சின்னக்கண்ணன், கோட்டூர்

சந்தித்த நாடுகளின் அரசியல், கலாச்சார அம்சங்களை பற்றி எழுதுவது நம்மை புதிய பயணத்திற்கு எழுச்சியூட்ட வேண்டும். ஆனால் அனைத்துலக இரவு வாழ்க்கையைப் பற்றி சல்லாபிப்பது தானே பிரபல பயணக் கட்டுரையின் முக்கிய அம்சமாக இருக்கிறது!



## சிமிண்டு ஸ்பிரிங்

வழக்கமான சிமிண்டை விடப் பத்து மடங்கு வலுவுள்ள அதே சமயம் உடையாமல் வளைந்து கொடுக்கக் கூடிய சிமிண்ட் கலவை ஒன்றை ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் டாக்டர் டேவிட் டபுள் கண்டு பிடித்துள்ளார். இந்தக் கலவையால் அதிர்ச்சியைத் தாங்கும் "ஸ்பிரிங்" கூட தயாரித்திருக்கிறார்கள். சிமிண்ட், பிளாஸ்டிக், களிமண் ஆகிய இக்கலவையால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் உடையாது. உறுதியாகவும் இருக்கும் தீப்பற்றாது; மின்சாரம் தாக்காது சிமிண்டு செலவும் குறையும். இந்தக் கலவையால் கார் "ஸ்பிரிங்", ஜன்னல்கள், மேல் கூரைகள் ஆகியவையும், உருவாக்கலாம் எஃகு அலுமினியத்தை விட இது மலிவாகவும் இருக்கும்.

சிமிண்டு பற்றாக்குறையால் தவிக்கும் நமக்கு நம் பல்கலைக் கழகங்கள் இது போன்ற உருப்படியான கண்டு பிடிப்புகளை வழங்குவது பற்றி சிந்திக்குமா? கல்வி முறையில் அடித்தள மாற்றம் கொணர்வோம். பிறகு இதை விட அற்புதங்களை நிகழ்த்துவோம்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

# அழகற்ற பெண்கள்!

நமது சமூகத்தில் ஒரு பெண் கொஞ்சம் அழகற்றவளாக பிறந்து விட்டால் போதும். அவள் திருமணம் பிரச்சனைக் குரியதாகி விடுகிறது!

உடலை மட்டும் பார்க்கும் இளைய சமூகம் பெண்ணின் உள்ளத்தையும் நேசிக்கத் தெரியாதது அறிவீனம் இல்லையா? 'ரதி'யாட்டம் பெண் தேடும் ஆண்கள் முதலில் தாங்கள் 'மன்மதன்கள், தானா? என்று சிறிதும் யோசித்து பார்ப்பதில்லையே! ஆண் வர்க்க ஆதிக்கச் சிந்தனையில் தான் பெரும்பாலான ஆண்கள் மூழ்கிக் கிடக்கிறார்கள்.



வரதட்சணை தரமுடிந்த அழகற்ற பணக் காரப் பெண்கள், பலர் பெண் எப்படியி-ருந்தாலும் பரவாயில்லை பணம் இருக் கிறதா' என்று பார்த்து மாலையிட முன் வரும் ஆண்களிடம் போய் கரையேறு கிறார்கள். இந்தப் பணப் பேய்களிடம் போய் வாழ்வை பறிகொடுத்துச் சீரழிந்த செல்வப் பெண்கள் ஏராளம்.


அழகற்ற ஏழைப் பெண்களுக்கு, வயது தான் ஏறிக் கொண்டே போகிறதேயொழிய, திருமண நாள் வருவதே கானல் நீராகிப் போகிறது. காத்திருந்து காத்திருந்து கடைசி வரை கட்டாயக் கன்னியாகவே வாழ நேர்கிறது.

நமது இளைஞர்கள் தங்கள் துணையைத் தேடும் விஷயத்தில் உடல் அழகுக்கு மட்டுமே முக்கியவத்துவம் தரும் அறியாமை நீங்க வேண்டும். அழகு என்பது பழகும் விதத்திலும், பகிர்ந்து கொள்ளும் விஷயத்திலுமே நடைமுறையில் பளிச்சிடுகிறது. மேனியழகு நிலையற்றது மட்டுமின்றி, நீண்ட நிறைவளிப்பதும் இல்லை.

அழகிய பெண்களை மணந்து கொண்ட எல்லோருமே மனநிறைவோடு இல்லை; அழகற்ற பெண்களின் அழகிய உள்ளத்தைப் புரிந்துகொண்ட பல ஆண்கள் நிறைந்த மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள். இந்த உண்மையை இளைஞர்கள் புரிந்து கொண்டால், அழகற்ற பெண்களுக்கும் வாழ்வு கிடைக்கும்.

—[illegible]

### சிவப்பு ▲ த்திற்குச் சமாதானம்





கம்பனி வாங்கக்
காசில்லை என்று—
ஒருடலாய்த்
துயின்றார்கள்!
பிள்ளை பிறந்தது—
இப்போது...
பால் வாங்கக்
காசில்லை?

—ரோகிணி (தேன் முள்ளுகள்)

### முன்னேற்றம்

ஒட்டுப் போட்டச்
சட்டை போட்ட
நாங்கள்—
ஒட்டுப் போட
கம்ப்யூட்டர்!
ஐய்யா!
கம்ப்யூட்டர்!

—மதுபாலிகா, (புதியதீதை)

### தற்கொலைப் பயணங்கள்

இப்பொழுதெல்லாம்
தற்கொலை செய்து
கொள்ள விரும்புபவர்கள்
தண்டவாளத்தை
நம்பி
தலையை வைப்பதில்லை
பெட்டியில் ஏறியே
பிரயாணம்
செய்கிறார்கள்

—மதுக்கூர் இராமலிங்கம்
(புள்ளியில்லாக் கோலங்கள்)

### எங்களூர் அரசியல் வாதிகள்





இவர்கள் ஆட்சியில்
மழை பெய்யத் தொடங்-
கினால் அது
மகத்தான சாதனை?-அதுவே
வெள்ளமாய் மாறி விபரீத
மானால் அது
எதிர்க்கட்சிக் காரர்களின்
சதித்திட்டம்

—[illegible], வீரபாண்டியன்
([illegible])

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

# ஜாதி வெறிக்குப் பலியான நீதிபதி

இன்றைய ஜாதிமத வெறி உணர்வுகளில் இருந்து தலைமை நீதிபதி கூட தப்ப முடிவதில்லை. கர்னாடகா ஹைகோர்ட்டின் தலைமை நீதிபதியாக இருந்த திரு. பீமையா அவர்கள் அதைச் சமீபத்தில் அனுபவித்து இருக்கிறார். நேர்மையும் நியாய உணர்வும் மிக்க நீதிபதி பீமையா, கர்னாடகா ஹைகோர்டிலேயே 15 ஆண்டு காலம் நீதிபதியாகவும் இருந்திருக்கிறார். 1983 ஏப்ரலில் ஓய்வு பெற்ற அவருக்குக் கிடைத்த கசப்பான அனுபவத்திற்குக் காரணம் அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்பது தான். ஏப்ரலில், அவர் ஓய்வு பெற இருக்கையில் அங்கிருந்த வக்கீல்கள் சங்கம் ஒன்று கூடி, ஓய்வு பெறுபவர்களுக்கு வழக்கமாக கொடுக்கப்படும் 'வழியனுப்பு வைபவம்' இவருக்குத் தேவை இல்லை என்று தீர்மானம் நிறைவேற்றியது. அச்சங்கத்தில் இருந்த சில தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்தவர்கள் இத்தீர்மானத்தை எதிர்க்க முயலவும் சங்கத்தில் கூச்சலும் குழப்பமும் உண்டாயிற்று. சில தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் அடியும் பட்டார்கள். அடுத்த நாள் ஜாதி வெறி பிடித்த சில வக்கீல்கள், கோர்ட் நடக்கையில் உள்ளே புகுந்து தலைமை நீதிபதி, பீமையாவைக் கொல்ல முயன்றனர். தீண்டத்தகாத ஒருவர் அமர்ந்து விட்ட காரணத்தினால் தலைமை நீதிபதியின் இருக்கையைக் கழுவி சுத்தம் செய்வோம் என்றனர். இதற்கிடையில், நீதிமன்றத்துக்கு வெளியே இருந்த காரை துஷ்டர்கள் சிலர் தீ வைத்துக் கொளுத்த, போலீஸ் தாழ்த்தப்பட்டவர் சங்கத்தைச் சேர்ந்த சிலரைக் கைது செய்தது. கோபமுற்ற தாழ்த்தப்பட்டோர், ஏப்ரல் 5, 1983 அன்று தலைமை நீதிபதி பீமையா அவர்களை அவமானப் படுத்தியதற்காக, மக்கள் உரிமை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் உயர் ஜாதிக்கள் வக்கீல்களைக் கைது செய்யக் கோரி மாபெரும் ஊர்வலம் நடத்தியது. சுமார் 10 வருடங்களுக்கு முன் திரு. பீமையாவை தலைமை நீதிபதி ஆவதில் இருந்து தடுக்கத் திட்டமிட்ட சில பிராமண தலைவர்களால் நடத்தியதாகச் சொல்லப்படும் "மிஸ் சுமித்திரா ► தேசாய் விவகார" (Miss Sumidra Desai episide) வழக்கின் கோப்புகளை வெளியிடச் சொல்லியும் கோரினார்கள். திரு. பீமையா ஜாதி வெறியின் ஆணவத் தாண்டல்களில் உண்டான மிகக் கசப்பான அனுபவங்களுடன் 'தர்மத்தின் கோயிலாக' விளங்க வேண்டிய நீதி மன்றத்தில் இருந்து ஓய்வு பெற்று இருக்கிறார். நீதி மன்றங்களில் நிலவும் இந்தக் கேவலமான ஜாதி வெறி உணர்வுகள் அம்பலப் படுத்தும் விதமாய் திரு. பீமையா ஒரு நூல் எழுதவும் இருக்கிறார்.

—அக்னி குஞ்சு

## நமக்கு வெற்றிலை மருத்துவம்

☐ தலைவலிக்கு இரண்டு அல்லது மூன்று துளிகள் வெற்றிலைச் சாற்றை மூக்கினுள் விட்டால் தலைவலி தீரும்.

☐ இதே மாதிரி காது குத்தலுக்கு மூன்று துளிகள் காதினுள் விட குணமாகும்.

☐ பால் சுரக்கும் போது பால்கட்டி உண்டாகும் வீக்கத்துக்கு வெற்றிலையை நெருப்பில் வாட்டி அப்படியே அடுக்கடுக்காக முலையில் வைத்துக் கட்ட வீக்கம் நீங்கும்.

☐ நுரையீரல் சம்பந்தமான நோய்களுக்கு வெற்றிலைச் சாற்றுடன் இஞ்சிச் சாறு கலந்து கொடுக்கலாம்.

☐ தீப்பட்ட புண்கள் மீது வெற்றிலையை வைத்து வந்தால் புண் ஆறும்.

☐ இளம் வெற்றிலைக் கொடி வேரும், மிளகும் சேர்த்துச் சாப்பிட்டு வர மலட்டை உண்டாக்கும்.

☐ வெற்றிலை வேரைத் தின்று வர பாடகர்களின் தொண்டை சுத்தப்படும்.

☐ வெற்றிலையை எண்ணெயில் நனைத்து விளக்கில் வாட்டி மார்பின் மேல் போட, நெஞ்சுவலி, கப இருமல், மூச்சுமுட்டல், கடின சுவாசம் விலகும்.

☐ வெற்றிலைச் சாற்றில் தேன் சேர்த்து உண்டால் இருமல் விலகும்.

☐ தேள்கடி பட்டவர்களுக்கு ஒரு பெரிய வெற்றிலையில் பதினொரு மிளகை வைத்து மடித்துக் கொடுத்து நன்றாக மென்று விழுங்கும்படி செய்தால் தேள் விஷம் நீங்கும்.

☐ நல்லெண்ணெய் முறிவுக்கு வெற்றிலைச் சாறு குடித்தால் சுகமாகும்.

—கணியூர் பருக்

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

அறுவடை நெருங்கியிருந்தது. விசாலப்பட்டிருந்த களத்தில் குதூகலமாய்ச் சுற்றித் திரிந்த தனது கோழிகளையே வெறித்துப் பார்த்தபடி தன் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தான் நல்லையன். முதலாளியின் கடிதம் அவன் கையில் இருந்தது. 'நாளைக்குப் புறப்பட்டு வருகிறரராம்.

போன வருஷ அறுவடைக்கு வந்திருந்த போதும் களத்தில் திரிந்த அவனது கோழிகளைப் பார்த்து விட்டுக் கண்டித்தார். "பாரு... களத்தையே அசிங்கபடுத்துதுக...பேசாம இத வித்துப்போடு...இதெதுக்கு...தொரட்டுப் புடிச்சதுக்..." கோழிகள் தின்றால் கூட தனது நெல் குறைந்து விடுமோ என்கிற உட்கருத்தில்தான் முதலாளியின் இப்பேச்சு நல்லையனுக்கும் அவன் மனைவி செல்லாயிக்கும் பட்டது.

முதலாளிக்கு ஒன்று பிடிக்கவில்லையென்றால் அதை உடனே அப்புறப்படுத்தி விட வேண்டும். அவர் மறுதடவை வரும்போது அதன் சுவடுகள் கூட இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் தன்னை மதிக்கத் தவறி விட்டதாய் அலறிப் புடைப்பார். "நீ தோட்டம் பார்க்க வேண்டாம்...வேறு யாரையாவது போட்டுக் கொள்கிறேன்...போ!" என்று கத்துவார்.

## சிறு கதை எதிர்ப்பு

நல்லையனும் வேறு வழியின்றி இந்தப் பத்து வருஷங்களாய் அவருக்கு உழைத்து ஓடாய்த் தேய்ந்து விட்டான். டாக்டரிடம் சென்று உடம்பைக் காட்டிய போது அவர் தினம் இரண்டு முட்டைகள் வீதம் உணவில் சேர்த்துக் கொள்ளச் சிபாரிசு செய்தார்.

ஆனால் இந்த மூன்று வருஷமாய் முதலாளிக்குப் பயந்து பயந்து கோழி வளர்த்து முட்டை சாப்பிட்டு... அவனுக்கு அலுத்து விட்டது.

தண்ணீர்க் குடத்துடன் திரும்பி வந்த செல்லாயி "அப்புறம் என்ன முடிவெடுத்திருக்கீங்க?... கோழிகளைக் கொண்டுப் போயி சந்தையில விய்க்கலியா?..." என்று கேட்டாள்.

அவன் தீர்மானமாய்ச் சொன்னான், "இல்ல... விய்க்கப் போறதாயில்ல..."

— அல்லி உதயன்

## வங்கிகளில் பகற்கொள்ளை

துப்பாக்கிக் கொள்ளையர்கள் சென்ற ஆண்டு முழுவதும் வங்கிகளில் கொள்ளையடித்த தொகை ரூ1.36 கோடி. வங்கி மேலிட ஆசியுடன், வங்கி மேலதிகாரிகள் சென்ற ஆண்டு உள்ளே அடித்த பகற் கொள்ளையோ ரூ132 கோடி அதாவது ஒரு நாளைக்கு ரூ35 லட்சம் வீதம் பட்டப்பகலில் சுருட்டப் பட்டிருக்கிறது.

சமீபத்தில் சென்னை கர்நாடக வங்கியில் உதவி மேனஜர் ஞான சம்பந்தத்தைக் கொலை செய்து விட்டு வெறும் ரூ14 லட்சத்தைக் களவாடிய லட்சுமி ராஜா ஷெட்டி, முட்டாள் தனமாக அவசரப்பட்டு விட்டதாக இப்போது சிறையில் நினைக்கக் கூடும். வங்கியின் உயர் பதவியை தனது கூர்ந்த திறமையுடன் எட்டிப் பிடித்திருந்தால், கத்தியின்றி, ரத்தமின்றி, பாதுகாப்புடன் இதைவிடப் பன் மடங்கு தொகையை அபகரித்திருக்கலாமே என்று வருத்தப்பட்டிருக்கலாம்.

நாடு முழுவதும் உள்ள தேசிய வங்கிகளில் மேலாதிகாரிகள் செய்யும் நூதன கையாடல்கள் பெருகி வருவதாக அதிகாரப் பூர்வமாகத் தெரிகிறது. மாதிரிக்கு ஒன்று :

20 தேசிய வங்கிகளில் 7 வது இடத்தில் இருப்பது சிண்டிகேட் வங்கி. இதன் தலைவர் (Chairman) ஆர். ரகுபதியின் வீட்டில் ரூ13 லட்சம் கணக்கில் வராத தொகையை மத்திய புலனாய்வுத் துறை (சி. பி. ஐ) கண்டு பிடித்திருக்கிறது. ஏப்ரல் 1978 இல் ரகுபதியின் சொத்து மதிப்பு ரூ98,300. ஆனால் ஆகஸ்டு 31, 1982 இல் அவர் சொத்து ரூ14.98 லட்சமாக உயர்ந்திருக்கிறது. அதாவது ஆண்டுக்கு ரூ4.30 லட்சமாக உயர்ந்தது எப்படி? வங்கியின் பணத்தை ரகுபதி சந்தேகமின்றி கையாடியிருப்பதால் ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டுமென புலனாய்வுத் துறை அறிவித்தது. இந்தியாவின் மிகப் பெரியதோர் வங்கியின் நபர் சந்தேகமின்றி கையும் களவுமாக மாட்டிக் கொண்டதற்கு, மத்திய அரசின் நிதித் துறை உடனே தண்டனையை நிறைவேற்றியதா?

நிதி அமைச்சகத்தின் மிக மிக முக்கியமான நபர்கள் இந்த நிகழ்ச்சியைக் கேட்டு சங்கடப் படவில்லை; நாண

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

வில்லை—மாறாக கோபத்தால் குதித்தார்கள்! 'எப்படி அரசாங்கத்திற்கு எந்த முன் அறிவிப்பும் தராமல் புலனாய்வுத் துறை ரகுபதி மேல் திடீர் சோதனை நடத்தலாம்' என புலனாய்வு அதிகாரிகள் மேல் சீறி விழுந்தார்கள். சேர்மன் ரகுபதி தென்னாட்டைச் சேர்ந்த ஒரு முதிய மத்திய அமைச்சருக்கு நெருங்கிய உறவினர் என்பது இந்த சீற்றத்திற்கு இன்னொரு காரணம்.

சி.பி.ஐ. வெட்டவெளிச்சமாக ஆதாரங்கள் காட்டியும் ரகுபதியின் உயர் பதவிக்கு எந்தப் பாதகமும் வராதது மட்டுமன்றி, இதன்பிறகு கல்கத்தாவிலும், லக்னோவிலும் சென்ற மார்ச்சில் நடந்த 'போர்டு மீட்டிங்'குகளில் தலைமை ஏற்கவும் அனுப்பப்பட்டிருக்கிறார்.

ரகுபதியும், ஊழலில் பிடிபட்ட பிற 4 தலைமை வங்கி அதிகாரிகளும், விடுமுறையிலாவது போகட்டும் என சி. பி. ஐ. நிதித்துறைக்கு அறிவுறுத்தியது. ஆனால் ரகுபதியை மேலும் கௌரவிப்பது போல, அவரை பொறுப்பும் மதிப்பும் மிக்க ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் இயக்குனராக உயர்த்தி சிறப்பித்துள்ளது மத்திய அரசு.

ஒரு பெரிய வங்கியில் சேர்மன் பதவி (3 ஆண்டுகாலம்) வகிக்க தற்போதைய 'ரேட்' ரூ 2 கோடி என்கிறது வங்கி உள் வட்டாரம். அப்படியானால் எவ்வளவு சுருட்ட வழியிருந்தால் இந்த 'ரேட்' தருவார்கள்? இதில் யார் யாருக்கு பங்கு? உள் கை? உள்ளே நுழைந்து பார்த்தால் மலையை விழுங்கிற பல முக்கியஸ்தர்கள் வெளிப்படுவார்கள். பம்பாய் பாரத ஸ்டேட் வங்கியில் மட்டும் 69க்குப் பின் ரூ600 கோடி கணக்கில் வழ வழ கொழ கொழ. குஜராத்தின் 299 தேசிய வங்கிகளில் கண்டறியப்பட வேண்டிய கையாடல்கள் ரூ50 ஆயிரத்திலிருந்து பல கோடிகள் வரை இருக்கலாம் என்கிறது சி. பி. ஐ.

லட்சக்கணக்கில் வேண்டியவர்களுக்கு 'ஓவர் டிராப்ட்', திரும்பி வராத பெருங்கடன்களைத் தெரிந்தே வழங்கல், பணம் இல்லாத செக்குகளை ஏமாந்து கொள்வது போல 'பர்சேஸ் செய்தல்' போன்ற தில்லுமுல்லுகளில் கோடிக்கணக்கான பொதுப் பணம் சுரண்டப் படுகிறது. 1982இல் 1574 மோசடிகள் நடந்ததை அரசே ஒப்புக் கொண்டிருக்கிறது.

**உத்தர வாதம்—பாதுகாப்பு—வசதியான எதிர்காலம் சேவையின் அவதாரம் போன்ற தாரக மந்திரங்களை பொது மக்கள்மேல் வீசியே 1969இல் வெறும் ரூ4000கோடியாக இருந்த டெபாசிட்டுகளை 1982இல் ரூ50,000 கோடிக்கு உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால் யாருடைய நலனுக்காக?**

டாக்டர்கள் மருந்து எழுதித்தரும் 'கையெழுத்து' நோயாளிகளின் 'தலையெழுத்தை'யே மாற்றக் கூடிய ஒன்றாகும். ஆனால் இவ்வளவு முக்கியமான விஷயத்தை எழுதும் டாக்டரின் கையெழுத்து என்ன கண்றாவியாக இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். இப்படி கிறுக்கலாக எழுதுவதை ஒரு போலி கௌரவமாகவோ, டாம்பீகமாகவோ, ஒரு தனி அந்தஸ்த்தாகவோ தவறாக எண்ணிக் கொண்டு பெரும்பான்மையான டாக்டர்கள் கோழி குப்பையை கிளறி விடுவதுபோல தாறுமாறான கிறுக்கல்களாக எழுதுவதை ஒரு முட்டாள்தனமான சம்பிரதாயமாக வைத்திருக்கிறார்கள்.

## டாக்டர்களின் கிறுக்கல்கள்

மருந்துகளின் பெயர்களோ ஒன்றுக்கொன்று ஒரே மாதிரி ஒலிக்கக்கூடியவையாகவும், ஓரிரு ஆங்கில எழுத்தை மாற்றிவிட்டால் மருந்தே அடியோடு மாறிவிடக் கூடியதாகவும் இருக்கின்றன. (உ—ம்) Dafren (DAFREN) இது இரத்த விருத்திக்காக, Daflon (DAFLON) இது மூல நோய்க்காக. இதை மாற்றிக் கொடுத்து விட்டால் நோயாளியின் கதி என்ன ஆவது?

நோயாளியின் உயிருடன் விளையாடும் தொழிலைக் கொண்ட டாக்டர்கள் இப்படி பைத்தியக்காரத்தனமான மாயையை விட்டொழித்து மருந்துகளின் பெயர்களை ஆங்கில 'காபிடல்' எழுத்தில் தெளிவாக எழுதும் பழக்கத்தை கட்டாயமாக கடைப்பிடித்தே ஆக வேண்டும்.

—சுய்ராஜ்

---

ஓர் ஏழை பள்ளியாசிரியர் மிக அவசர தேவைக்கு ரூ 500 கடன் கேட்டால் ஆயிரம் முறை அலைக் கழித்து 200% பாதுகாப்புடன், இரண்டு பேரிடம் (காலில் விழுந்து) ஜாமீன் பெறச் செய்து, தொகை தருவதற்குள் எவ்வளவு பந்தாடுகிறார்கள், என்று நினைத்துப் பார்க்கும் போது, இந்தப் பாங்குகளின் பத்தினி வேடம், நம்மை ஆவேசம் கொள்ளச் செய்கிறது. (ஆதாரம்:ப்ரோப்) —ஸ்டெனிஸ்லாஸ்

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

**திருச்சி பேருந்து நிலையத்தில் :**

மற்ற எந்த ஊர்களையும் விட திருச்சி (P.T.C.) பேருந்து நிலையத்திற்கு வந்து போகும் திருவள்ளுவர் பேருந்துகள் மிகுதி. காரணம் திருச்சி தமிழகத்தின் முக்கிய சந்திப்பு. இங்கு மின்சார தடையின் போது ஒளி வழங்க 'அவசர கால விளக்குகள்' ஒன்று கூட இல்லை. மின் தடையின் போது பயணிகள் படும் அவதி சொல்லும் தரமன்று. விழுப்புரம் பேருந்து நிலையத்தில் கூட அவசரகால விளக்குகள் உள்ளன. இதில் வேடிக்கை என்ன வெனில் 'டேப்ரெக் காடர்கள்' வைத்து சினிமாப் பாடல்களை ஒலிபரப்பும் நிர்வாகத்தினருக்கு, மிக அவசியமான, அவசரமான 'எமர் ஜென்சி லாம்பு' களைப் பொருத்த மனதில்லை. மனம் மாறுவார்களா? கவனிப்பார்களா?

—ந. பாண்டியன். பாரதி இளைஞர் இயக்கம், திருச்சி-1

## வாசகர் குமுறல்

**குடிநீரில் கொள்ளை கும்பல் :**

சென்னை குடிநீர் வாரியம் லாரிகளிலிருந்து ஊற்றி விட்டுப் போகும் தண்ணீரை விநியோகிக்க அங்கிருக்கும் அ. தி. மு. க குண்டர்களும், ரௌடிகளும் சேர்ந்து பொது மக்களிடம் குடம் ஒன்றுக்கு 5 பைசா வீதம் வசூலித்து கொள்ளை அடிக்கிறார்கள். எதற்கு காசு வாங்குகிறீர்கள் என்று கேட்டால் அவர்களுக்கு அடி, உதை. இது சம்பந்தமாக புகார் செய்தால் அடுத்த நாளிலிருந்து தண்ணீர் வருவதில்லை. மேலும் புகார் கொடுத்தவரை ஆளை வைத்து உதைக்கிறார்கள். பொது மக்களைப் பயமுறுத்தியும், அவர்களின் தண்ணீர் தேவையைப் பயன்படுத்தியும் இப்படி ஒரு கூட்டம் கொள்ளை அடிப்பதை அதிகாரிகளோ, அரசாங்கமோ கண்டு கொள்வதே இல்லை.

—பி. அண்ணாமலை, சென்னை.82

**கோவை வீதி அபாயம் :**

கோவை நகரின் கௌலி பிரவுன் ரோடு வழி நெடுக மருத்துவமனைகளுக்குப் பெயர் போனது. மருதமலைக்கும், விவசாயப் பல்கலைக் கழகத்திற்கும், பாரதியார் பல்கலைக் கழகத்திற்கும் இட்டுச் செல்லும் இச் சாலையின் கதி? வழியெங்கும் மின் விளக்கு இருந்தும் இரவில் எரிவதோ ஒன்றிரண்டு. இருட்டு வழியில் ஒரு பக்கம் மூடப்படாத பெரிய நீள சாக்கடை ஓடுகிறது. மழைக் காலங்களில், இரவில் இதில் காலை வைத்தால் அதோ கதி தான். மாநகராட்சியின் கடைக்கண் இந்த முக்கிய சாலையின் மீது என்று தான் விழுமோ?

—நா. செந்தில் முரளி, கோவை.2

**திருநெல்வேலி தியேட்டர்கள் :**

நெல்லை நகரில் 11 தியேட்டர்கள் இருக்கின்றன. வேறு பலவும் உருவாகிக் கொண்டு இருக்கின்றன. இருக்கின்ற தியேட்டர்கள் நிலையோ மிகவும் மோசம். உதாரணத்திற்கு ஜங்ஷனில் உள்ள ஓர் கொட்டகையில் பெண்களுக்கு என்று தனியாக கழிப்பிடமே இல்லை. தியேட்டரில் உள்ள ஆசனங்களுக்குப் பதில் சிமெண்டு பிளேட் பெஞ்சுகள் போட்டிருக்கிறார்கள். தியேட்டருக்குள் பல தூண்கள் படம் தெரியாதபடி செய்து விடுகின்றன. பல நாட்கள் காசுக்கு ஆசைப்பட்டு அளவுக்கு அதிகமாக டிக்கட் கொடுத்து விடுகிறார்கள். வாங்கியோர் முழுவதும் நின்று கொண்டே படம் பார்க்கும் பரிதாபம். உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுப்பார்களா?

—எஸ். ராமமூர்த்தி, பாளையங்கோட்டை

**பம்பாய் தமிழர்கள் மனக்குறை :**

பம்பாயிலிருந்து சென்னைக்கு, காலை, மதியம், இரவு 3 ரயில்கள் விடப்பட்டும் கூட்டம் குறையவில்லை. இந்நிலையில் இரயில்வே நிர்வாகம் காலையில் கிளம்பும் ஜனதா எக்ஸ்பிரசை ரத்து செய்து அதே ரயிலை பெங்களூர் உதயன் எக்ஸ்பிரஸ் என்று மாற்றி அதில் ஒரு பகுதி பெட்டிகளை மட்டும் சென்னைக்கு என்று போட்டு, குண்டக்கல்லில் துண்டித்து அனுப்புகிறது. இம்முடிவு பம்பாய் தமிழர்களை வேதனைப் படுத்தியுள்ளது. தமிழர் நலன் காப்பதாகச் சொல்லும் பம்பாய் தமிழ் சங்கமோ, பம்பாய் தமிழர் பேரவையோ இது வரை இதற்கு எதிர்க்குரல் கொடுக்காதது மிகவும் வருத்தமாக உள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் பம்பாயில் கிளைகள் உள்ளன. தமிழகத்திலிருந்து பேச்சாளர்களை வரவழைத்து ஒருவரையொருவர் தாக்கிக் கொள்கிறார்களேயன்றி தமிழர் நலன் காக்க இவர்கள் உருப்படியாக ஒன்றும் செய்வதில்லை.

—எம். பி. பாபு, தாரவி, பம்பாய்-17

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

## உப்பு வேண்டாம் உப்பளம் வேண்டாம்

நம்முடைய உடம்புக்கு ஒரு நாளுக்கு அரை கிராம் உப்பே போதுமானது. ஆனால் இக்காலத்தில் பலரும் ஒரு நாளுக்கு 15 கிராம் உப்பை உட்கொள்கிறார்கள். ஏற்கனவே நாம் பயன்படுத்தும் கீரை, காய்கறிகளில் நமக்குத் தேவையான உப்பு இருக்கின்றது.

அதிகப் படியாக நாம் உட்கொள்ளும் உப்பை வெளியேற்றச் சிறு நீரகங்கள் (KIDNEYS) அதிகப்படியாக வேலை செய்து விரைவில் சோர்ந்து விடுகின்றன. வெளியேற்ற முடியாத உப்பின் ஒரு பகுதி தசைகளில் தங்கி விடுகிறது. உப்பைத் திரவ வடிவத்தில் தான் வைத்திருக்க முடியும். ஆதலால் தசைகளில், உப்புத் தண்ணீரின் தேக்கம் காணப்படுகின்றது. ஒரு கிராம் உப்பை வைத்திருக்க 70 மில்லி தண்ணீர் தேவைப்படுகிறது. இதன் விளைவாக அதிகம் உப்பைச் சேர்த்துக் கொள்பவர்கள் உப்பியிருக்கிறார்கள். உப்பு அதிகம் சேர்ப்பதால் கண்களைச் சுற்றிலும் சோடியம் வளையம் அமைந்து அழகைக் கெடுக்கும். உப்பு, அதிகம் சேர்த்த உடலில் எந்த மருந்தும் பிடிக்காது.

எனவே உப்பைக் குறைக்கக் கீழ்வரும் வழிகளைக் கடைப் பிடிக்க.

1. சமையலின் போது பயன்படுத்திய உப்பிற்கு மேலே அதிகப்படி உப்பைப் போட்டுக் கொள்வதில்லை என்று ஒரு நல்ல சபதம் எடுத்துக் கொண்டு கடைப் பிடியுங்கள்.
2. ஊறுகாய்களைக் குறையுங்கள். சிறுவர்களுக்கு ஆவக்காய் ருசியை அறிமுகப்படுத்தாதீர்.
3. மாமிச உணவை கட்டுப்படுத்துக. அதில் இருக்கும் கோலஸ்டரால் கொழுப்பும், பல்வேறு உப்புக்களும் இந்தத் அழுத்தத்திற்கு அடிப்படைக் காரணங்களாம். மீன், கருவாட்டில் உப்பு மிக மிக அதிகம்.
4. காரம் புளிப்பு குறைத்தால் உப்பு தானாகவே குறையும்.

—சுட்டி பாரதி

[அடுத்து : 'நல்ல தூக்கம் இல்லையா?']

## சீட்டுக்கம்பெனி மோசடி

பிரபல உம்மிடியார்ஸ் பர்ங்கர்ஸ் நிறுவனத்திற்கு அடுத்தப்படியாக அப்பாவி மக்கள் பணத்தை ஏப்பம் விட்டு ஒரே இரவில் தலைமறைவான இன்னொரு நிறுவனம் ராசி சிட்பண்ட்ஸ். இது 42, வேளச்சேரி சாலை, கிண்டி, சென்னை-32 என்ற முகவரியில் செயல்பட்டு வந்தது.

இதில், ஐ. ஐ. டி, பி. டி. சி போன்ற அரசு நிறுவனங்களின் கடை நிலை ஊழியர்கள் பலர் 100 மாத தவணை சீட்டில் தலா ரூ500, ரூ1000 எனக் கட்டினார்கள். உறுதி ஈட்டுத் தொகை இல்லாமல் நேரடி ஏலத்தில் பங்கு கொள்ளாமல் மொத்தத் தொகை ரூ 20,000 த்தில் ஒரு குறிப்பிட்ட தொகை கமிஷனாக (ரூ3000 முதல் ரூ5000 வரை) எடுத்துக் கொள்ளப்பட்டு 4 நபர்களின் ஜாமீனில் ரூ15,000 வரை பெறலாம் என ஆசை வார்த்தை காட்டினார்கள்.

மொத்தமாக பணம் அளிக்கப்படும் என்று அறிவிக்கப் பட்ட தேதியன்று இந்நிறுவனத்திற்குச் சென்று பார்த்த போது "இக்கம்பெனி 90, அண்ணாசாலை என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது" என்ற நோட்டீஸ் ஒட்டப்பட்டிருந்தது. அண்ணா சாலைக்குச் சென்று பார்த்தால் அது போன்ற முகவரியும் இல்லை; நிறுவனமும் இல்லை; இரவோடு இரவாக பணத்தை மூட்டையடித்து ஓடி விட்டனர் ராசி சிட்பண்ட்ஸ் நிறுவனத்தினர். வீடு கட்டலாம், மகள் திருமணத்தை முடிக்கலாம், மொத்தக் கடன் தொல்லையிலிருந்து மீளலாம் என்று திட்டமிட்டு பணத்தைக் கட்டியவர்கள் வாயிலும், வயிற்றிலும் அடித்துக் கொண்டது தான் மிச்சம். இவர்களில் பலர் பணம் கட்டுவதற்காக தங்கள் மனைவியின் நகைகளைத் தெரிந்தோ, தெரியாமலோ அடகு வைத்தவர்கள். இது நாள் வரை இப்பகற் கொள்ளையர் போலீசார் கைக்குச் சிக்கவில்லை.

கவர்ச்சிகரமான விளம்பரங்களில், பின்னால் பொதுவாக பெரிய ஏமாற்றமும் ஒளிந்திருக்கும் என்பதை பொது மக்கள் உணர்ந்தாலன்றி இந்தப் போலி நிறுவனங்களை ஒழிக்க முடியாது.

—உமா செல்வம்

# ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்

'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்ற புகழுக்கு உரியவர்கள் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள். ஆனால் இந்த இறைவன் சுமைதாங்கிக் கல்லாகவே இருந்து வருவதே வேதனைக்குரிய உண்மை. சில ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களிடம் பேசிய போது இந்த வேதனைகள் வெளிப்பட்டன. அவர்களின் பெயரும், பள்ளியும் குறிப்பிட மாட்டோம் என்ற போது தான் இந்த உண்மைகள் வெளிப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. தஞ்சைக்கருகில் உள்ள கிராமத்து பள்ளி ஆசிரியரிடம் பேசியபோது.

நான் நாலு வருஷமா இந்த ஸ்கூல்ல இருக்கேன். நகரத்தை விட கிராமத்துல இருக்கற எங்களோட பிரச்சனைகள் வெளியிலேயே வர்ரதில்ல. சுமார் 125 பேர் படிக்கற இந்த ஸ்கூல்ல ஹெட்மாஸ்டரோட என்னையும் சேர்த்து ரெண்டே பேர் தான் இருக்கற நிலை. காலைல ஸ்கூல் 9 மணிக்கு ஆரம்பம்ன்னா நா 7 மணிக்கே வந்துடணும். பள்ளி கூடத்த துப்பரவு செய்யறதிலேர்ந்து தோட்டத்துக்கு தண்ணீர் பாய்ச்ச்சர வேலை வரை நா மட்டும் செய்தாகனும் மதிய உணவு சமைக்கறத்துக்காக தனியா ஆளே கிடையாது.



நான் தான் சமைப்பேன். இதனால இடையில வந்த "முதலமைச்சர் சத்துணவு" திட்டம் கூட என்னை அவ்வளவா பாதிக்கலைன்னு தான் சொல்லனும். ஒரு நாள் ஸ்கூலுக்கு வர முடியாமப் போயிட்டாக் கூட ஹெட்மாஸ்டர் கிட்டே கண்டபடி பேச்சு வாங்கனும். இந்த ஸ்கூல் வேலையைச் செஞ்சுட்டுக் கூட சாயந்தரம் வீட்டுக்கு ஓடிட முடியாது. ஹெட்மாஸ்டர் வீடு பக்கத்துல தான் இருக்கு. அவர் வீட்டு எருமை மாட்டைக் குளிப்பாட்டி, தண்ணி காண்பித்து, வைக்கோல் பிடுங்கிப் போட்டு கொட்டுல்ல கொண்டு போய் கட்டற வரைக்கும் மாட்டுக் காரனா மாறிடறேன். இதல்லாம் வெளில சொன்னா எனக்குத் தான் அவமானம்.

கே: ஏன்? இதையெல்லாம் நீங்க முறைப்படி உங்க யூனியனிடமோ, அரசாங்கத்திடமோ தெரியப்படுத்தலாமில்லையா?

பதில்: மன்னிக்கனும். இதுக்கு முன்னால இங்க வேலைப் பார்த்தவங்க எச். எம்மை முறைச்சுக்கிட்டதாலே, கிடைத்த சோக முடிவுகளெல்லாம் எனக்கு ஒரு பாடம், இன்னிக்கு என் குடும்பம் குடிக்கற அரை வயிற்றுக் கஞ்சியை நான் இழக்க விரும்பல.

□ சென்னையில் உள்ள ஒரு நர்சரி பள்ளியில் பி.எஸ்.ஸி பட்டதாரியான ஓர் ஆசிரியரிடம் பேசிய போது—

"நான் மெட்ராஸ்ல உள்ள ஒரு நர்சரி ஸ்கூல்ல ஆறு வருஷமா வேலை பார்த்துட்டு வர்றேன். நா முதல்ல வேலைக்கு ஜாயின் பண்ணினப்ப 60 ரூபாய் கொடுத்தாங்க. இப்ப 85 ரூபாய் போட்டுக் கொடுக்கறாங்க. அதாவது ஆறு வருஷத்துல 25 ரூபாய் இன்கிரிஸ் ஆயிருக்கு. காலைல எட்டு மணிலேர்ந்து சாயந்தரம் ஐந்து, ஐந்தரை வரைக்கும், ஸ்கூல்விட்டப்புறமும் வேலைப் பண்ணியே தீரனும். என்ன பண்றது! என் தலையெழுத்து. வேறு வேலை கிடைக்கல! ஒவ்வொரு வருஷமும் ஸ்கூலுக்கு 10 பசங்கள புதுசா விட்டா தான் வேலை நிரந்தரம்."

□ ஆசிரியர் சங்கம் பற்றி ஒரு தலைமையாசிரியரிடம் கேட்ட போது—

"என்னைப் பொறுத்தவரை "சங்கம்" என்பது மண் குதிரையைப் போன்றது. ஸ்டிராங்கான ஒரு யூனியன் இருந்தால் நாங்கள் ஏன் சார் இன்னும் இப்படியே இருக்கிறோம்" என்றார்.

□ சென்ஸஸ் எடுக்க, ரேஷன் கார்டு விநியோகிக்க, இவர்களை வேலையாட்களாக ஏவி விடுவது பற்றி ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியரிடம் கேட்டபோது இப்படி நொந்து போனார் :—



"இந்த விவகாரத்திலே பப்ளிக்கோட மூவ் பண்ற சிரமம் அனுபவிச்சு பார்த்தவங்களுக்கு தான் புரியும். ஒரு சமயம் இப்படித் தான் பக்கத்து கிராமத்துல சென்ஸஸ் எடுக்கப் போயிருந்தப்ப ஒரு பாட்டிக்கிட்ட 'ஏன் பாட்டி உன் பேத்தீ மல்லிகான்னு சொன்னீங்க? ►

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

## எமக்கு வந்தவை

**முழக்கம் :** (ஈழ மாணவர் பொதுமன்ற மாத வெளியீடு) ஆசிரியர்: எம். ஆரோக்கியதாசன், தபால் பெட்டி எண் 4967 சென்னை-600017. ஆண்டு சந்தா ரூ 15-00 தனியிதழ் ரூ 1.00

**காவலர் முரசு :** (மாத இதழ்) ஆசிரியர்: இரா. பத்மநாதன் 56, இரண்டாவது தெரு, பக்தவத்சலம் காலனி, சென்னை-600039. ஆண்டு சந்தா ரூ 6.00 தனியிதழ் 50 காசு

**அறிமுகம் :** (கையெழுத்து மாத இதழ்) ஆசிரியர்: கவிதாசன் 44.A, வடக்குத் தோட்டம், க. க. சாவடி. கோவை-641105 விலை போடவில்லை,

**கோட்டின் கீழே புள்ளிகள் :** (கவிதைத் தொகுப்பு) ஆசிரியர்: மங்களா, வெளியீடு: ரஞ்சிதம் பதிப்பகம், ராம் நகர் 9ம் வீதி, மச்சுவாடி, புதுக்கோட்டை-622001. விலை ரூ 5.00.

என்ன வயசு இருக்கும்னு கேட்டுப் புட்டேன். அதுக்கு அவங்க என் சட்டையைப் புடிச்சு தடியால் அடிச்சே புட்டாங்க. வேனா ஒரு காலேஜ் புரபசரையோ, ஒரு ஆபீசரையோ வீடு வீடா போய் சென்ஸஸ் எடுத்துட்டு வரச் செல்லட்டும் பிச்சுப்புடுவாங்க. நீயும் ஆச்சு உன் வேலையும் ஆச்சுன்னு உதறி தள்ளி புட்டு போயிடுவாங்க. எங்களுக்கு வேற வழியில்ல எல்லா கஷ்டத்தையும் அனுபவிச்சு தான் ஆகனும்.''

☐ சென்னை மாநகராட்சி பள்ளியொன்றில் 5வது வகுப்பு ஆசிரியையிடம் பத்திரிகை பேட்டி என்றவுடன் மிரண்டார், பின் வற்புறுத்திய போது இப்படி பதில் வந்தது.-

''எங்களுக்குப் பிரச்சனைகள் ஒன்றும் இல்லை. நான் இன்னிக்கு ரூ795 மாதச் சம்பளம் வாங்கறேன். சம்பளம் கரக்டா வந்துடுது. அப்பப்ப சின்ன சின்ன பிரச்சனைகள் இருக்கத்தான் செய்யும். பெரிசு படுத்தற அளவுக்கு ஒன்றும் இல்லே. யூனியன் எல்லாம் நல்லா ஸ்டிராங்காத்தான் இருக்கு. என்னைப் பொறுத்தவரை இந்த வேலையில் முழு திருப்தி தான்'' இவரது பதில் நிஜந்தானா? என்று மாநகராட்சி ஆசிரியர்கள் கூறட்டும்.

—சந்திப்புகள் :— சீ. இரகுராமன்

மதுரைக்குப் புதிதாக வருபவர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய இடம் மதுரை டவுன் ஹால் ரோடு. சீட்டுக்குலுக்கி எடுத்து அதிஷ்டப் பரிசு தருவதாகச் சொல்லி கொண்டு 20 பேர் கொண்ட பயங்கரமான ஏமாற்று கோஷ்டி ஒன்று அங்குத்திரிந்து வருகிறது. சீட்டுக்குலுக்கி உடனே பரிசு தருவது தவிர, மூணு சீட்டு நடத்துவது, சிலோன் வியாபாரிகள் மாதிரி பேசி போலித் துணிகளை மக்கள் தலையில் கட்டுவது போன்ற காரியங்கள் இந்த கோஷ்டிக்கு அத்துப்படி.

கிராமத்திலிருந்து வருபவர்களும், டூரிஸ்டுகளும் எளிதில் இவர்கள் வலையில் விழுகிறார்கள். ஒரு முறை இந்தக் கோஷ்டியிடம் மாட்டிக் கொண்டு தன் 'ஸிட்டிசன்' வாட்சை பறி கொடுத்து விட்டு அழுது கொண்டிருந்த ஒரு கிராமத்துக்காரரை நான் பார்த்தேன். இவர்களை அடக்குவாரோ, கேள்வி கேட்பாரோ இல்லை. டவுன் போலீசார் இவர்களிடம் 'சம்பளம்' வாங்குபவர்கள்.

## மதுரை ஜாக்கிரதை!

இந்தக் கோஷ்டியைப் பற்றி மேலும் பல விவரங்கள் தெரிய வந்துள்ளன. இந்த 20 பேருக்கும் தினக் கூலி, சாராயம், சிகரெட் செலவு கமிஷன் போக 'முதலாளி'க்கு ஒரு நாளைக்கு ரூ 1500 வரை லாபம் நிற்கிறதாம். சிங்கப்பூர் கடத்தல் பொருட்களைக் கடை போட்டு விற்கும் ஒரு 'பெரும் புள்ளி' தான் முதலாளியாம். மாதந்தோறும் முதலாளியிடமிருந்து மாமூல்கள் போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய் சேர்ந்து விடுகிறதாம். சிங்கப்பூர் கடத்தல் பொருட்களை இவர் கையாளுவதால் கஸ்டம்ஸ் அதிகாரிகள் முதல் போலீஸ் அதிகாரிகள் வரை இவருக்குப் பழக்கமானவர்களாம்.

மதுரையில் சட்ட ஒழுங்கின் லட்சணம் இது! எனவே புதிதாக வருவோர் இவர்களைக் கண்டால் இனங்கண்டு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

—பழங்கானத்தம் பாலாஜி

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

# நண்பர்களே!

உங்கள் கடிதங்களுக்கு நன்றி. உங்கள் கைகுலுக்கல்களும், சிறு குட்டுகளும் எங்களை இன்னும் இன்னும் சிறப்பாக, கூர்மையாக, விழிப்பாக சுட்டியைக் கொண்டு செல்ல உந்து சக்தியாகின்றன. தொடருங்கள்

முன் இதழில் அறிவித்தபடி, சுட்டியின் மசாலா பத்திரிகைகள் பற்றிய விமர்சனம் பத்திரிகையுலகில் ஏற்படுத்திய புதிய விழிப்பினைத் தொடர்ந்து, சுட்டியின் கூர்மையான விமர்சன வெளிச்சம் தமிழ்த் திரையுலகின் மேல் விழுகிறது!

வெறும் பொழுது போக்கும் நிழலாக இல்லாமல், திரைபடம் இந்நாட்டு மக்களின் உள்ளத்தை, உயிர் மூச்சை, மூளையின் நரம்புகளைக் கூட ஊடுருவிச் சென்று பாய்ந்திருக்கிறது. அதைப் பற்றி நாம் கவலைப் படாமல் ஒதுங்குவதற்கில்லை. திரையுலகில் நீண்டகால பாதிப்பை மக்களிடம் ஏற்படுத்திய பிரமுகர்கள் பற்றிய தொடர் ஆய்வில் முதல் கட்டமாக நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் இடம் பெறுகிறார்.

இரண்டு தலைமுறைகளை பாதித்து அதன் விளைவாக தன் நிழற்படங்களையே நிஜமாக்கி, அரசியல் சக்தியாக மாற்றிக் கொண்ட முன்னோடி மனிதர் எம். ஜி. ஆர்.

இது தொடர்பான செய்திகளைத் திரட்ட, அவரோடிருந்தவர்களை அணுகிய போது யாரும் முழு உண்மைகளைச் சொல்ல அஞ்சி நடுங்குகிறார்கள் அல்லது நழுவுகிறார்கள். எம். ஜி. ஆரின் வெறுப்புக்கு ஆளாகாதபடி நடந்து கொள்ள வேண்டும் என்று அவரது மிகப்பெரிய விரோதி கூட திரையுலகில் நினைக்குமளவுக்கு, அவரது ஆதிக்கம் மறைமுகமாக அச்சுறுத்திக் கொண்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

யார் சாட்சி சொல்லாவிட்டாலும், இது வரை வெளிப்படையாக அச்சிலும், திரையிலும் வந்த உண்மைகள், உண்மைகளாக நின்று சரியான விமர்சனத்தை முன் வைக்க நமக்குத் துணை வரும்.

இந்த பலத்தோடு நமது விமர்சனம் கூர்தீட்டப் பட்டுக் கொணடிருக்கிறது.

அன்புடன்

அடுத்த இதழில் திரை விலகும்.

ஆசிரியர்

# உயர்நீதி மன்றத்தின் உட்பக்கம்

"நீதி மன்றங்கள் செயல் படுவது பற்றியும் நீதி வழங்குதல் பற்றியும் மக்கள் மேலும் ஆழ்ந்த அக்கறை செலுத்த வேண்டும். நீதி மன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு உள்ளாகிற நிலைமை எப்போதோ ஒரு தடவை ஏற்பட்டாலும் சரி என்கிற அளவுக்கு தீர்ப்புகளையும் மக்கள் தைரியமாக விமர்சிக்க வேண்டும். அச்சமில்லாமல், நியாயமாக, தைரியமாக விமர்சிக்கப்படுகின்ற நிலைமையை ஏற்றால் தான் நீதித்துறை சுதந்திரமாக நேர்மையாக அச்சமின்றி செயல் பட முடியும்?— இந்தியத் தலைமை நீதிபதி திரு. சந்திர சூட் 1981 அக்டோபரில் கேரள உயர் நீதிமன்ற வெள்ளி விழாவில் சொன்னவை.

நம்மை உசிப்பி விடுகிற முயற்சியை இந்தியத் தலைமை நீதிபதி நன்றாகவே செய்திருக்கிறார். இந்த மகத்தான நிறுவனத்தின் கௌரவத்தையும் கம்பீரத்தையும் முறையான விமர்சனத்தால் கட்டி காக்க முடியும் என்பது தான் அவரது நம்பிக்கை.

சென்னை உயர்நீதி மன்றத்தின் மீது எம். ஜி. ஆர் சமீப காலத்தில் வீசிய கண்டனங்கள் விமர்சனமாக முடியாது. அவை மிரட்டலின் ஒரு யுக்தியே. அவரது ஆட்சியில் நடந்து உள்ள அத்து மீறல்களை நீதி மன்றம் அம்பலமாக்கியுள்ளது என்பதே அவருக்கும் அவரது கூட்டத்தினருக்கும் எரிச்சலை உண்டாக்கியிருக்கிறது.

வெளியிலிருந்து வீசப்படுகிற கல்லெறியை விட உள்ளிருந்து நடத்தப் படுகிற குழி பறிப்புத் தான் இந்த நிறுவனத்திற்குப் பெரும் ஆபத்தைக் கொண்டு வர முடியும். இந்த நிறுவனத்தில் அக்கறை கொண்டவர்கள் என்ற அருகதையில் எங்கள் பங்கினை இந்தத் தொடர் மூலம் நிறை வேற்ற விரும்புகிறோம். நியாயங்களை வலுப்படுத்துவதே எங்கள் நோக்கம்; அதற்குச் சமாதி கட்டுவதல்ல, நிகழ்ச்சிகளைச் சொல்லுவதன் மூலம்—தீர்ப்புகளைச் சுட்டிக் காட்டுவதன் வாயிலாக—இத்தொடரைச் சாதிக்கலாம் என்ற நம்பிக்கை. ▶

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

ஜூன் 3ல் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டின் சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ள இரு பஸ்களைப் படமெடுத்தனர். புத்தம் புதிய இவ்வண்டிகள் ஆறு மாதகாலமாக அதே இடத்தில் குப்பை அண்டி நிற்கின்றன. படமெடுத்தவர் நழுவி விடவே செய்தியாளரை உயர் நீதி மன்ற பதிவாளரிடம் கூட்டிச் சென்றனர். படமெடுத்ததின் மூலம் உயர் நீதி மன்றத்தின் கொடி கட்டிப் பறக்கிற புகழை நாசப் படுத்தி விட்டதாக பதறியிருக்கிறார்கள் அதிகாரிகள். அதன் புனிதத்தில் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கு இவ்விரு வண்டிகளின் அநாதை நிலைக்குக் காரணம் சொல்ல நெஞ்சில்லை. உண்மை சொல்லும் பத்திரிக்கையை மதிக்க முடியாதவர்கள் நீதிக்கு என்ன செய்து விடப் போகிறார்கள்!

ஜூன் 14ல் சென்னை உயர் நீதிமன்றம் ஒரு பெண்ணுக்கு கருவைக் கலைக்க அனுமதி கொடுத்தது. கற்பழிப்பால் அப்பெண் கருத்தரித்ததாக விவகாரம். இதனை வெளியிட்ட நாளேடுகளில் 'இந்து' மட்டும் யார் பெயரையும் வெளியிடாமல் பத்திரிகை நாகரிகத்தைத் தக்க வைத்துக் கொண்டது. ஆனாலும் அப்பெண்ணின் கணவன் டைப்பிஸ்ட் எனச் சொல்லி அவர் வேலை செய்யும் நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிட்டுள்ளது, இது ஒரு விதத்தில் அரைக் கிணறு தாண்டுவதாகவே இருக்கிறது. மற்ற பத்திரிக்கைகள் அப்பெண்ணின் பெயரையும் அவரது கணவன் பெயரையும் விவரமாக வெளியிட்டு தங்கள் சமூகக் கடமையைக் கெட்டியாக நிறைவேற்றியிருக்கின்றன! கொடுமைக் காரர்களோ, அப்பெண்ணைக் கற்பழித்தனர். இந்த பத்திரிக்கை காரர்களோ இப்படி செய்தியை வெளியிட்டு அக்குடும்ப கவுரவத்திற்குச் சாணி வாரி அடித்துள்ளனர், பத்திரிகைகளுக்குச் சுயக்கட்டுப்பாடு தெரிவதற்கு நாம் நிறைய காத்திருக்க வேண்டும் போலுள்ளது. ஊருக்கு செய்தி சொல்லும் இவர்களுக்குப் பத்திரிக்கை-நாகரிகம் பற்றிய செய்தியை யார் சொல்லி அழுவது!

—இரத்தினம்

---

✱ நள்ளிரவில் கூட இளம் பெண்டிர், வீதிகளில் பயமின்றி நடமாடலாம். பஸ் நிறுத்தங்களில் நிற்கலாம் பயம் இல்லை.

—அறம்

# பிரஞ்சு-ஆப்பிரிக்க நாடுகள்

பிற நாடுகள்

பிரஞ்சு பேசப்படும் ஆப்பிரிக்க நாடுகளில் 5 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து பெற்ற அனுபவங்களில் சில:

✱ 53 நாடுகள் ஆப்பிரிக்காவில் உள்ளன. அதில் 17 நாடுகள் பிரஞ்சு காலனி நாடுகளாக இருந்தவை. இன்று சுதந்திர நாடுகள். இவை ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பிற நாடுகளிலிருந்து வித்தியாசமாக உள்ளன.

✱ ஓட்டு முறை, குடியாட்சி முறை ஒரு சில நாடுகள் தவிர ஏனைய நாடுகளில் தோற்றுவிட்டன. விரைந்த வளர்ச்சிக்கும், முறையான கட்டுப்பாட்டுக்கும் குடியாட்சி முறை பொருத்தமற்றது என்பதே இங்கே அனுபவ உண்மை.

✱ பிரஞ்சு நாகரிக ஆதிக்கம் உள்ளது எனினும் பிரஞ்சுக்காரர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய நல்ல பண்புகளையும் கற்றுக்கொண்டிருக்கிறார்கள். சான்றாக: சுற்றுப்புறத்தூய்மை, நேரந்தவறாமை, செவ்வைப்பாடு (Perfection) முதலானவை.

✱ ஒரு சிறு குழந்தை கூட தெருவின் மூலை முடுக்குகளில் கூட சிறுநீர் கழிப்பதைக் கூடக் காண முடியாது,

✱ அதிகாரிகள், ஆளவந்தார்கள் ஆகியோரை வீணே வழிபடும் துதிப்போக்கு அணுவளவும் இல்லை. பெரிய பெரிய அதிகாரிகள் வரும் போதும், போகும் போதும் சாதாரண பணியாள் கூட அமர்ந்துக் கொண்டே இருப்பதும், பேசுவதும் மிக மிகச் சர்வ சாதாரணம்.

✱ சினிமாச் சுவரொட்டிகள், அரசியல் சுவரொட்டிகள் இல்லாத சுத்தமான சுவர்கள்.

✱ சினிமா அரங்கு 'ஹவுஸ் புல்' என்று கண்டதே இல்லை சினிமா அரங்குகளில் வகுப்புவாரிக் கட்டணம் என்பதே இல்லை. எல்லோர்க்கும் ஒரே கட்டணம்.

✱ பள்ளித் தொடக்கம் முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை, பயிற்று மொழி பிரஞ்சு மொழியே.

✱ பிரஞ்சு வெள்ளை மாதுகளுக்கும், ஆப்பிரிக்க நீக்ரோ ஆடவர்க்கும் இடையே திருமணம் நடப்பது மிகச் சாதாரணம்.

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

## கட்டி விற்பனையாளர்கள்

அதிகாரப்பூர்வமாக கீழ்க் கண்ட இடங்களில் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த இடங்கள் தவிர பிற இடங்களிலிருந்து விற்பனை செய்ய ஆர்வம் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்:—

**சென்னை மாவட்டம் :**
நகரம் முழுவதும்.

**செங்கல்பட்டு மாவட்டம் :**
திருவள்ளூர், வண்டலூர், பேரூர் செங்கல்பட்டு.

**வடஆற்காடு மாவட்டம் :**
திருப்பத்தூர், ஆரணி, போளூர் ரெட்டியூர், குடியேற்றம், வேலூர்

**தென்ஆற்காடு மாவட்டம் :**
சிதம்பரம், திருக்கோவிலூர், வளவனூர், கள்ளக்குறிச்சி.

**தஞ்சாவூர் மாவட்டம் :**
கும்பகோணம், வேதாரண்யம், திருவாரூர், மன்னார்குடி, வல்லம் ஒரத்தநாடு.

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்**
திருச்சி, ஸ்ரீரங்கம், கரூர், அரும்பாவூர், வெள்ளியனை.

**சேலம் மாவட்டம் :**
சேலம், நாமக்கல், சங்ககிரி, ஜலகண்டாபுரம் திருச்செங்கோடு

**பெரியார் மாவட்டம் :**
கொடுமுடி, B குமாரபாளையம் சென்னிமலை, எண்ணமங்கலம் ஈரோடு, கொமராயனூர், தாராபுரம்.

**தர்மபுரி மாவட்டம் :**
ஊற்றங்கரை, தர்மபுரி.

**நீலகிரி மாவட்டம் :**
கோத்தகிரி, கிஹாங்.

**கோயம்புத்தூர் மாவட்டம் :**
கோயம்புத்தூர், அவனாசி, நம்பி-யாம்பாளையம், பூளைமேடு, திருப்பூர், உடுமலைப்பேட்டை, சூலூர், காரமடை, நெகமம், மின்பாறை, வால்பாறை, குப்பு-சாமிநாயுடுபுரம், சின்னியம்பாளையம், பெதப்பம்பட்டி, செஞ்சேரி-மலை, பொள்ளாச்சி, மடத்துக்-குளம், கணியூர், காந்திபுரம், வட-கோயம்புத்தூர், சிங்கநெல்லூர், வரதராஜபுரம்.

**மதுரை மாவட்டம் :**
மதுரை, திண்டுக்கல், தேனி. தென்கவி.

**புதுக்கோட்டை மாவட்டம் :**
புதுக்கோட்டை

**இராமநாதபுரம் மாவட்டம் :**
காரைக்குடி, இராஜபாளையம், ஸ்ரீவல்லிபுத்தூர், மானாமதுரை, இராமேஸ்வரம், உச்சிப்புளி, புதுமடம், பரமக்குடி.

**திருநெல்வேலி மாவட்டம் :**
தூத்துக்குடி, இராதாபுரம், குருக்குச்சாலை, புதியம்புத்தூர், எப்போதும் வென்றான், கரிவலம் வந்த நல்லூர், சங்கரன்கோவில்

**கன்னியாகுமரி மாவட்டம் :**
நாகர்கோவில், மார்த்தாண்டம், குழித்துறை.

**வெளி மாநிலங்கள் :**
பம்பாய், பெங்களூர்.

**அட்டைப்படம் :** இவ்விதழ் கட்டி அட்டைப் படம் 'செம்மலர்' ஜூலை '75 இதழிலிருந்து எடுக்கப்பட்டது. ஜூலை, இதழ் 75இல் வெளியான இந்தச் சிரிப்புத்துணுக்கு, இப்போதும் காலப் பொருத்தத்தோடு இருக்கிறதே.

# மார்வாடிகள்

தமிழகத்தின் பொருளாதாரத்தைப் பெருமளவில் மார்வாடிகள் ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள்—அரசு ஆதரவுடன்!

1982–83இல் லைசென்ஸ் பெற்ற வட்டிக்கடைகள் 18,000 இதில் வடநாட்டு மார்வாடிகள் 3000 கோடிக்கு வியாபாரம் செய்து 1500 கோடி ரூபாய் லாபம் அடைகிறார்கள். தமிழக அரசின் ஆண்டு பட்ஜெட்டே சுமார் ரூ 600 கோடி தான். இந்தியாவில் அதிக வட்டிக் கடைகள் இருப்பது தமிழகத்தில் தான். சென்னையில் மட்டும் 4000 வட்டிக் கடைகள் உள்ளன.

அடகு வியாபாரத்தில் மட்டுமன்றி அங்கெங்கென்னாதபடி எங்கும் மார்வாடிகளின் ஆக்டபஸ் கரங்கள் நீண்டிருக்கின்றன.

போக்குவரத்து சாதனங்களில் இவர்கள் ஆதிக்கம் : லாரிகள்—24,836, டாக்சிகள்—10,429, ஆட்டோ ரிக்ஷாக்கள்—7,893.

இதைத் தவிர பிளாஸ்டிக் கச்சாப் பொருட்கள், ஸ்டீல் கோட்டா, சிமெண்ட் கோட்டா, பூச்சி மருந்து ஆதிக்கம், மருந்துகள் மொத்த கொள் முதல், மின்சார சாதனங்கள், ஜவுளித் துறையில் ஏதேச்சதிகாரம், காகித மொத்த முடக்கம் எல்லாம் இவர்கள் கைகளில் இவர்களன்றி 'பஜாரில் ஓர் அணுவும் அசையாது.

இவர்கள் பணம் சம்பாதிப்பதற்காக எதற்கும் தயாரானவர்கள், யாரையும் விலை கொடுத்து வாங்குபவர்கள் என்பது நாடறிந்ததே. கல்வித் துறையில் கூட இவர்கள் கால் வைத்து பச்சை வணிக நிறுவனங்களாக மாற்றி வருகிறார்கள்.

50 ஆண்டுகளாக இருக்கும் குஜராத்தின் அகராதியில் மார்வாரி என்றால் மோசக்காரன், அயோக்கியன், அநியாய வட்டி வாங்குபவன் என்றே அர்த்தம் தரப்பட்டுள்ளது. ஆளும் கட்சி எதுவாக இருந்தாலும், அதனுடன் சமரசம் செய்து கொள்வதோ அல்லது ஆட்சியாளர்களை விலைக்கு வாங்குவதோ இவர்கள் வழக்கம். — [illegible]

[ஆதாரம் : கறுப்பு மலர், பறக்கும் படை வெளியீடு]

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

# செம்மலர்

பொதுவுடமை இயக்கம் இரண்டுபட்ட போது தாமரை சி. பி. ஐ பத்திரிகையாக இருந்ததால் சி. பி. எம். க்காக 'செம்மலர்' உருவாக்கப்பட்டது.

13 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட இப் பத்திரிகையை முதலில் சின்னப்ப பாரதி தான் ஆசிரியராக இருந்து தொடங்கினார். இதனைத் தன் சொந்த இலக்கியப் பத்திரிகையாக நடத்தினார். பின்னர் தான் சி. பி. எம் இயக்கம் இப் பத்திரிகையை அவரிடமிருந்து தனது அதிகாரப் பூர்வமாக ஏடாக ஏற்றது.

இதன் ஆசிரியர் கே. முத்தையா சி. பி. எம் செயற்குழு உறுப்பினர். இதன் வெளியீட்டாளராக எம். ஆர். வெங்கட்ராமன் சமீபத்தில் காலமாகும் வரை பொறுப்பேற்றிருந்தார். தற்போது இப்பொறுப்பை தமிழ் மாநிலக் குழு செயலாளர் தோழர் ஏ. நல்ல சிவன் ஏற்றுள்ளார்.

செம்மலர் வாசகர் வட்டம் தான் விரிவடைந்து பின்னால் 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' உருவாக காரணமானது.

தொடக்க இதழ்களில் கட்சிக்காரர்களே அதிகம் எழுதினர். பின்னர் செம்மலர் எழுத்தாளர்கள் மசாலா பத்திரிகைகளில் எழுதத் தொடங்கி புகழ் பெற்றனர். அதே மாதிரி வெளி எழுத்தாளர்களும் செம்மலரில் எழுத அழைக்கப் பட்டனர்.

திரைப்படத் துறையில் புதுமைக்கு குறுக்கே நந்தியாக நிற்கும் விநியோகிஸ்தர்களை 'முறியடிப்பது பற்றி மேலாண்மை பொன்னுச்சாமி எழுதுகையில் தரும் பயனான தகவல் (ஆகஸ்டு 81) "புரட்சி கர இயக்குநர் ஷியாம் பெனகலின் திரைப்படத்தை முடக்க, இந்திப்பட விநியோகிஸ்தர்கள் பகைமை மிக்க சவால விட்ட போது அந்தச் சவாலை துணிச்சலுடன் தொழிலாளிகள் நேரடியாக ஏற்றனர். பால் விற்பனைச் சங்கத்தைச் சேர்ந்த அந்தத் தொழிலாளிகள் தலைக்கு 2 ரூபாய் என்று வசூல் செய்தனர். 4 லட்ச ரூபாய் பணம் சேர்ந்தது. 'பல்துளி பெரு வெள்ளமாயிற்று'. அந்தத் ▶




தொழிலாளிகளின் வெள்ளத்தில் விநியோகிஸ்த அழுக்குகள் அடித்துச் செல்லப் பட்டு, அந்தப் புரட்சிக் கலைஞனின் உன்னதக் கலைப் படைப்பு சுதந்திரமாக மக்களைச் சந்தித்தது. வசூலிலும் வெற்றி பெற்றது. அவார்டும் பெற்றது."

எல்லா வற்றையும் விட கதைகளே செம்மலரில் அதிக பக்கங்களை ஆக்ரமிக்கின்றன. 1983 ஜனவரி செம்மலரில் 80 பக்கங்களில் 59 பக்கங்கள் கதைகளே. செம்மலரில் வெளி வந்த கதைகளே சமீபத்தில் அடிக்கடி 'இலக்கியச் சிந்தனை' பரிசுக்கு தேர்ந்தெடுக்கப் பட்டு வருவது கதைகள் ஓரளவு தரமானவை என்பதைக் காட்டுகிறது.

செம்மலரில் எழுத்தாளர் சு. சமுத்தரத்தின் தொடர் கதை 'சத்திய ஆவேசம்' வெளி வரத் தொடங்கு முன், அவர் வாசகர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து : எத்தனையோ வியாபார பத்திரிகைகளில் என் பார்வையில் பல படைப்புகளை நான் படைத்தாலும், செம்மலரில் இந்தத் தொடர் கதை வருவது என்பது எனக்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய கவுரவம் என நினைக்கிறேன்."

செம்மலர் கவிதைகள் பெரும் பாலும் மனதில் நிற்பதில்லை. அபூர்வமாகவே நல்ல கவிதைகள் வருகின்றன.

'தாமரை'யில் இலக்கியத்தையும், மனிதர்களையும் படித்தவர்கள் இயக்கமாக மாறிச் செயல் பட்டதைப் போல் 'செம்மல'ரில் எவருமில்லை என்று குறிப்பிடும் ஒரு விமர்சகரின் பார்வை சிந்தனைக் குரியது.

7500 பிரதிகள் அச்சேறுவதாகச் சொல்லப்படும் செம்மலர், பெரும் பாலும் கட்சி சார்புடைய வட்டாரங்களில் தான் உலா வருவதாக தெரிகிறது. அதன் இலக்கியத் தரமும், விமர்சனப் பார்வையும் இன்னும் நிறைய வளர்ந்தாலன்றி, அது இன்னும் பெரிய வட்டத்தைப் போய்ச் சேர முடியாது.

ஆண்டுச் சந்தா ரூ12; தனியிதழ் ரூ1 முகவரி :6/16 பைபாஸ் ரோடு, மதுரை-625 018.

[அடுத்து : "அறிவு வழி"]

—ஜே

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

சுட்டி ஒவ்வொரு மாதமும் **முதல் தேதி** வெளிவரும்.
12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 5-00
தனிப்பிரதி 50 காசு
எல்லாத் தொடர்புகளுக்கும் :—

ஆசிரியர் குழு, **'சுட்டி'**
1494, அண்ணா நகர், சென்னை-600 040.

**சுட்டி முன் இதழ்கள் வேண்டுமா?** இதழ் எண்கள் 1 முதல் 7, 21, 22, தவிர பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பணவிடை (M.O.) அனுப்பினால், எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

**சுட்டியை இலவசமாக அறிமுகப்படுத்துங்கள்:** நீங்கள் பெற்ற பயனை உங்கள் நண்பர்களும் பெறட்டுமே! சுட்டியை வரவேற்கக்கூடியவர் என்று நீங்கள் நினைக்கும் நண்பர்களின் முகவரியை அனுப்புங்கள். எவ்வளவு முகவரி அனுப்பவும் தடையில்லை. முற்றிலும் இலவசமாக மாதிரி இதழ் ஒன்று அவர்களுக்கு அனுப்பப்படும்.



உலகப் புகழ்பெற்ற அறிஞர் ஜார்ஜ் பெர்னாட்ஷாவின் உரையாடல்களில் இயல்பாகவே நகைச்சுவை அதிகமாகக் கலந்திருக்கும். பொருளுமிருக்கும். ஒரு சமயம் இளம் நாடக ஆசிரியர் ஒருவர் தனது நாடகத்திற்கு வந்திருந்து நாடகம் பற்றிய கருத்தைச் சொல்லும்படி பெர்னாட் ஷாவிடம் கேட்டுக் கொண்டார். அவரும் சம்மதித்து, நாடகத்திற்கு வந்திருந்தார். ஆனால், இரண்டாவது காட்சியிலேயே தூங்கிப்போய் விட்டார் ஷா. இதைக் கண்ட நாடக ஆசிரியர் அவரைத் தட்டி எழுப்பிக் கேட்டார்.

'நாடகத்தைப் பார்த்து விமர்சனம் செய்வதாக ஒப்புக்கொண்டுவிட்டு, இப்படி நாடகத்தைப் பார்க்காமலே தூங்குகிறீர்களே?'

ஷா சிரித்தபடி சொன்னார் 'நாடகம் நடந்து கொண்டு இருக்கும் போது தூங்குவதும் ஒரு வகை விமர்சனம்தான்!'

நாடக ஆசிரியர் ஷாவின் கிண்டலைப் புரிந்துகொண்டு அசட்டுச்சிரிப்பு சிரித்தார்.

# பாபியின் மர்மச் சாவு

பத்திரிக்கைகளில் பரபரப்பாகியுள்ள பீகார் சட்டமன்ற செயலக டைப்பிஸ்ட் திருமதி ஸ்விட்ஷா திரிவேதி என்ற 'பாபி'யின் இறப்பு புதிய தகவல்களைத் தந்துள்ளது.

இவர் பஸ் முதலாளியின் மகனைக் காதல் திருமணம் செய்து கொண்ட பின், குடும்ப உறவு சரிபட்டு வராமல் பிரிந்து வாழ்ந்தார். இப்பெண் முன்னாள் சட்ட மன்ற துணைத் தலைவரும் தற்போதைய எம்.எல்.சியுமான செல்வி ராஜேஸ்வரி சரோஜ்தாஸ் (வயது 70) என்பவரின் வளர்ப்பு மகள். ஜனதா ஆட்சி நடந்த போது சட்ட மன்ற செயலக டெலி போன் ஆபரேட்டர் வேலைக்கு ஆள் எடுக்கப்பட்டது. பதினைந்து பேர் மனு செய்ததில் பயிற்சி ஏதும் இல்லாத இப் பெண் தேர்வு பட்டியலில் முதலாவதாகப் போடப்பட்டார். பின்னர் அங்கேயே டைப்பிஸ்ட்டாக அமர்த்தப் பட்டார். 1979லிருந்து வேலை பார்த்து வந்த இப்பெண் திடீரென 1983 மே 8ல் இறந்து விட்டார். இந்த இறப்பில் மர்மம் இருப்பதாக பாட்னா இந்திநாளேடு ஒன்று மே 10இல் செய்தி வெளியிட்டது. இதைக் கண்ட காவல் துறையினர் இதுபற்றி விசாரிக்க ஆரம்பித்தனர்.

இப்பெண் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி இவற்றின் கச்சடா அரசியல் வாதிகளின் நெருங்கிய நண்பராக இருந்து வந்தார். அரசியல் நரிகள் பிணம் தின்னிகளாய் அலைகிற இந்தக் காலத்தில் சொல்லவும் வேண்டுமோ?



பாட்னாவின் மூத்த போலீஸ் அதிகாரி இந்த மர்ம சாவு பற்றி விசாரித்தார். இரண்டு டாக்டர்கள் மாறுபட்ட காரணங்களைச் சொல்லி இச் சாவுக்குச் சான்றிதழ்கள் கொடுத்துள்ளனர். போஸ்ட் மார்ட்டம் செய்யாமலே சான்றிதழ் பெறப் பட்டதைக் கண்ட போலீஸ் அதிகாரிக்குச் சந்தேகம் தோன்றிற்று. அவரது முயற்சியால் பாட்னா மருத்துவக் கல்லூரி பேராசிரியர் போஸ்ட் மார்ட்டம் செய்தார். வெளிப்புறக் காயங்கள் எதுவும் இல்லை.

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

யெனத் தெரிந்தது. குடலை இரசாயணப் பரிசோதனை செய்த போது இறப்புக்கு விஷம் தான் காரணம் என்பது உறுதியாயிற்று.

வீட்டை சோதனை செய்த போது தற்கொலை செய்து கொண்டதற்கான தடயம் எதுவும் கிடைக்க வில்லை. வளர்ப்புத் தாயும் பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டு போலீஸாருக்குச் சந்தேகத்தைக் கூட்டினார்.

அப்பெண்ணின் அறையில் கிடைத்த புகைப்படங்களில் சில அரசியல் பெரும் புள்ளிகள் ஆபாசமாக அவளிடம் தஞ்சமிருப்பதை வெளிப்படுத்தியுள்ளன. அவர்களுக்கு இந்த இறப்பில் தொடர்பு இருப்பதாக பலத்த சந்தேகம் உருவாகியுள்ளது.

அரசியல் நரிகளுக்குச் சுகம் கொடுத்து வயிறு வளர்க்கும் பிரிவு எனவும், அதற்கு உட்படாத பிரிவு எனவும் காவல் துறை அதிகாரிகள் மத்தியில், இரண்டு முகாம்கள் வெளிப்பட்டுள்ளன. எனவே மத்திய அரசின் போலீஸ் பிரிவான சி. பி. ஐயிடம் விசாரணையை ஒப்படைத்துள்ளதாகச் சொல்லப் படுகிறது.

இந்த இறப்பையும் அதன் பின்னணியையும் ஒரு கொடுமை என்ற அளவில் மட்டுமே பார்க்கக் கூடாது. இந்த மானம் கெட்டதனம் எல்லா மட்டங்களிலும் வேர் பதித்துக் கிளை விட்டுப் பரவியுள்ளது. நேர்மையாளர்கள் வெறும் முணு முணுப்பாளர்களாய் முடங்கிக் கிடப்பதே இப்படிப்பட்ட நரிகளுக்குப் பலமாகி விடுகிறது.

ஓர் ஒழுங்கிணைப்பைக் காட்டுவது குறைந்த பட்ச எதிர்ப்பினை வளர்ப்பது என்ற பார்வை வந்தாக வேண்டும். வெறும் உபதேசங்கள் என்ன செய்து விட முடியும்?

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்பது ஏதோ ஒரு கோப்பைக் கவிஞனின் உளறலல்ல, அது தன்மானம் உள்ளவன் நினைவு படுத்திய மானுடச் சித்தாந்தம் தானே!

— இரத்தினம்

**சுட்டியில் மலிவு-வரி விளம்பரம் :** சுட்டியில் 3 வரிகளுக்குள் (சுமார் 15 வார்த்தைகள்) அடங்குமாறு உங்கள் செய்தியை வெளியிடுவதற்குக் கட்டணம் ரூ. 15/- மேற்கொண்டு வரியொன்றிற்கு ரூ. 5/- மட்டுமே.

● "நியாயம் கேட்டேன்" அனுபவக் கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்ட அத்தனை அன்பர்களுக்கும் நன்றி. போட்டி முடிவுகள் அடுத்த இதழில் வெளியாகும்.


**வரி விளம்பரங்கள் :**

◇ 'இலக்கணக் குறிப்பு கண்டுபிடிப்பது எப்படி?'-பள்ளி, கல்லூரி மாணவர்களின் இலக்கண சிக்கலைத்தீர்க்கும் வழிகாட்டி; விலை: ரூ 1-25. M.O. செய்தால் பெறலாம்: ஜெய ஹனுமான் அச்சகம், 219, எம்.டி.எச். சாலை, சென்னை-53

▭ வீட்டிற்கோர் நூலகம் அமைக்க விருப்பமா? சரசுவதி குடும்ப புத்தக வங்கியில் சேர்ந்து பயனடைக. 380, செம்பியம் சாலை, கதிர்வேடு கிராமம், புழல், சென்னை-600 066.

■ வேலையற்ற இளைஞர்கள் மூலதனமில்லாமல் வருவாய் பெற வகைசெய்யும் தொழில் காலண்டர் ஏஜென்சி. விவரங்களுக்கு எழுதுக: ராமமூர்த்தி ஆப்செட் பிரிண்டர்ஸ் 106, பெரிய கருப்ப நாடார் காலனி, அஞ்சல் பெட்டி எண்: 33, சிவகாசி-626 123.


சுட்டியை சென்னையில் ஒவ்வொரு மாதமும் பணம் கட்டி வாங்கலாம். வீட்டிலே வந்து போடுகிறோம். குறைந்தது 10 பேர்களாவது வாங்கும் பகுதியாக இருக்கவேண்டும். எழுதுக: திருமதி. எம். மைதிலி, 27-பி, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், சென்னை-600 053.

**"ரங்கா டைப் பௌண்ட்ரி"**

- ☐ போஸ்டர் அச்செழுத்துக்கள்.
- ☐ எல்லா வித, எல்லா மொழி ஈய எழுத்துக்கள்.
- ☐ அச்சக உபகரணங்கள்.
- ☐ புது அச்சகம் தொடங்க நாணயமான வழிகாட்டுபவர்கள்.

அலுவலகம்: 73, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி, சென்னை-112.
தொழிலகம்: 38, குட்டி செட்டி தெரு, பெருமாள்பேட்டை, சென்னை-7.
தொலை பேசி: 37999, 664293


FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010




ஆசிரியர்: நிர்மலா சுந்தர், வெளியிடுபவர்: பெ. இரத்தினம்,
1494, அண்ணா நகர், சென்னை-40. அச்சிட்டோர்:
J. S. கிட்ராஜ் ஷா. இந்தா பிரிண்டர்ஸ், 35, மப்பைத் தெரு,
சென்னை-600 002.

FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010

ட்டி: மாத இதழ் 1, ஜூலை 1983 Regd. No. TN/MS(N)/317
icensed to post without prepayment   Licence No. TN/MS(N)WPP-60



1891 / Dec 2010
http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்



# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane roduction with innovative technology and the farmers have achieved successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes o earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribut ng over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand armers (a bulk of Whom are small and marginal farmers) and generating ainful rural employment to over fifty thousand families in the primary. econdary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development pro rammes (I) Sakthi High School Provides a conducive environment for tudy and development of rural children. (II) Sakthi Institute of Techno ogy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
3-A, Race Course Road,
oimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E BOOKS - www.thamizham.net - TM1891 / Dec 2010